# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:139 ★19.09.2026 ★தமிழ் நாளிதழ் ★சனிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:139 ★19.09.2026 ★TamilDaily ★Saturday ★Page-4 ★Price-₹5/- Chennai


# "ரீல்ஸ் மோகத்தில் கம்பம் எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா செய்யும் அராஜகம்"

## குச்சனூர் கோயிலில் அதிகாரிகளின் விரைவான நடவடிக்கையை மறைத்து மலிவான விளம்பர அரசியல்

தேனி மாவட்டம் குச்சனூர்அருள்மிகுசனீஸ்வர பகவான் திருக்கோயில் வளாகத்தில் உயிரிழந்த நபர் விவகாரத்தில், உண்மையை மறைத்து கம்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெகநாத் மிஸ்ரா போலியான குற்றச்சாட்டுகளை பரப்பியுள்ளது தற்போது அம்பலமாகியுள்ளது. சம்பவம் நடந்த காலை 9:40 மணிக்கே கோயில் நிர்வாகமும் சமூக நலத் துறை அதிகாரிகளும் உயிரிழந்த நபர் குறித்து தகவல் அறிந்து, உடனடியாக தன்னார்வ தொண்டு நிறுவன வாகனத்துடனும் ஆட்டோ மூலமாகவும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். உயிரிழந்தவர் ஆதரவற்றவர் அல்ல என்பதையும், அவருக்கு உறவினர்கள் இருப்பதையும் கண்டறிந்த அதிகாரிகள், சென்னை உள்ளிட்ட இடங்களில் உள்ள அவரது குடும்பத்தினரை தொடர்பு கொண்டு ஒப்புதல் கடிதம் பெறுவதற்காகவே சட்டப்பூர்வமான காலதாமதம் ஏற்பட்டதாக தெரிவிக்கின்றனர். இந்த நடைமுறைகள் அனைத்தும் முடிந்து காலை 11:00 மணி முதல் 11:15 மணிக்குள்ளாகவே, உடலை காவல்துறையினரிடம் முறைப்படி ஒப்படைக்கும் நோக்கில், அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் அறிக்கை அனுப்பும் வரை அனைத்து பணிகளையும் அதிகாரிகள் மிகச் சரியாக முடித்துவிட்டனர். ஆனால் அதிகாரிகள் சம்பவ இடத்தில் இருந்து அனைத்து உதவிகளையும் செய்து கொண்டிருக்கும் போது தான் எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா அங்கு வந்துள்ளார். அது மட்டுமன்றி, ஒரு நபர் எத்தனை மணி நேரத்திற்கு முன்பு இறந்தார் என்பதை மருத்துவ பரிசோதனை செய்து மருத்துவர் மட்டுமே சான்றளிக்க முடியும் என்ற "அடிப்படை விவரம்" கூட தெரியாமல், 10 மணிநேரத்திற்குமுன்பே இறந்துவிட்டார் என எம்.எல்.ஏ. தன்னிச்சையாக "பொய் பிரச்சாரம்" செய்துள்ளார். மேலும், எம்.எல்.எ வந்த நேரத்தில் கோயில் செயல் அலுவலர் வேறு பணியின் காரணமாக வெளியில் இருந்தபோதிலும், அவரது அலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு உண்மை நிலவரத்தை என்னவென்று, எதுவென்று கேட்டறிந்திருக்கலாம். ஆனால், கோயில் நிர்வாகத்திடம் எந்தவொரு விவரத்தையும் நேரடியாக கேட்டறியாமல், தன்னிச்சையாக சமூக வலைதளங்களில் "பொய் பேட்டி" கொடுத்துள்ளதை ஏற்றுக்கொள்ளவே முடியாது என்றும் மேலும் இறந்த நபர் காலை வரை உயிருடன் இருந்ததற்கான ஆதாரமும் உள்ளது என கோயில் நிர்வாக தரப்பில் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். தன் சொந்த தொகுதியில் தீர்க்கப்பட வேண்டிய எண்ணற்ற மக்கள் பிரச்சினைகள் தேங்கி கிடக்கும் நிலையில், மாற்று தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு சென்று, விளம்பர அரசியலுக்காக அரசுத் துறை நடவடிக்கைகளை கொச்சைப் படுத்தும் அநாகரிகமான போக்கில் அவர் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். ஏற்கனவே ரேஷன் கடை ஊழியர்களை ஒருமையில் பேசுவது, கடைமட்ட ஊழியர்களை தரக்குறைவாக நடத்துவது போன்ற இவரது செயல்களால் அவருக்கு எதிராக ஊழியர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தும் அளவிற்கு நிலைமை தீவிரமடைந்தது குறிப்பிடத்தக்கது. அகத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாக நடந்து கொள்ளும் இவர், வருங்காலத்தில் 'பசுத்தோல் போர்த்திய புலி' என்ற அடைமொழிக்கு முழு பொருத்தமானவராக மாறுவார் என அரசுத் துறை ஊழியர்கள் தரப்பில் குமுறல்கள் கிளம்பியுள்ளன தன் ரீல்ஸ் மோகத்திற்காகவும், சுய விளம்பரத்திற்காகவும், உண்மையிலேயே களத்தில் நின்று பணியாற்றிய அரசு அதிகாரிகளையும் கோயில் நிர்வாகத்தையும் பழிவாங்கும் நோக்கில் செயல்படும் இவரது இந்த நடவடிக்கை, ஜனநாயக பண்பாட்டிற்கும் அரசியல் நாகரிகத்திற்கும் முற்றிலும் எதிரானது என்று சமூக ஆர்வலர்களும் அரசு அதிகாரிகளும் குற்றம்சாட்டுகின்றனர்.



## "வாலிபர் தற்கொலை" உருக்கமான கடிதத்தை FIRஇல் சேர்க்கக்கோரி சீலையம்பட்டியில் உறவினர்கள் சாலை மறியல்

### உறவினரான 9 மாத கர்ப்பிணி 1 மணி நேரம் சாலை மறியல் ஈடுபட்டதால் சற்று நேரம் பரபரப்பு

தேனி மாவட்டம் சீலையம்பட்டியை சேர்ந்த பழனிவேல் ராஜன், மீனாட்சி தம்பதியினரின்மகன்விக்னேஷ் (28). B.E. பட்டதாரியான இவர், சென்னையில் ஓராண்டு பணிபுரிந்த போது இன்ஸ்டாகிராம் மூலமாக திருவாரூர் மாவட்டம் திருக்கனமங்கையை சேர்ந்த ஐஸ்வர்யா என்பவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், மன உலைச்சலால் விக்னேஷ் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர் உயிரிழப்பதற்கு முன் எழுதியுள்ள 3 பக்க மரண வாக்குமூல கடிதத்தில், ஐஸ்வர்யா, அவரது தாயார் மலர் மற்றும் அண்ணி விஜயா ஆகியோரே தனது முடிவுக்கு காரணம் என தெரிவித்துள்ளார். அந்த பெண்ணின் நடவடிக்கை சரியில்லாததால் விலக முயன்றபோது, 'காவல் நிலையத்தில் புகார்



அளித்து விடுவேன்' என மிரட்டி தன்னை தொடர்ந்து மன உலைச்சலுக்கு ஆளாக்கியதாகவும், பெண் பார்க்க சென்ற இடத்திலும் தங்களை பற்றி அவதூறு பரப்பி வரனை தடுத்து நிறுத்தியதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், காவல் துறையில் பெண்கள் அளிக்கும் புகார்கள் மட்டுமே உடனடியாக கவனத்தில் கொள்ளப்படுவதாகவும், ஆண்களுக்கு எதிரான பொய் புகார்கள் குறித்து உரிய சட்ட பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்றும் தனது கடிதத்தில் உருக்கமாக கோரிக்கை விடுத்துள்ளார். இதனிடையே, விக்னேஷ் எழுதி வைத்த மரண வாக்குமூலக் கடிதத்தை காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கையில் (FIR) சேர்க்காமல் விட்டுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த அவரது குடும்பத்தினரும் உறவினர்களும் கடிதத்தை உடனடியாக FIRஇல் இணைக்க வலியுறுத்தி சீலையம்பட்டியில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர் சாலை மறியலால் சுமார் 1 மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிப்பு அதிகமான நிலையில் இச்சம்பவம் தொடர்பாக தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சின்னமனூர் காவல் நிலையத்திற்கு நேரடியாக வருகை தந்து தீவிர விசாரணை நடத்தினார்.

## ரூ.1,000 உதவித்தொகை கிடைப்பதில் இனி தாமதம் கூடாது: புதுமைப்பெண்-தமிழ்புதல்வன் திட்ட நிலுவைகளை விரைந்து முடிக்க 125 கல்லூரிகளுக்கு ஆட்சியர் வந்தனா கார்க் உத்தரவு

திருவண்ணாமலை, செப்.18–

திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டங்களின் கீழ் உயர் கல்வி பயிலும் மாணவ–மாணவிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் ரூ.1,000 உதவித்தொகை தாமதமின்றி சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை விரைந்து முடிக்க 125 கல்லூரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தியுள்ளார்.



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சமூக நலத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்ட ங்களின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் இன்று (18.09.2026) நடைபெற்றது.

தமிழக அரசின் புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டங்களின் கீழ், 6ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவிகள் மற்றும் மாணவர்கள், அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று, தற்போது இளங்கலை பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு அல்லது தொழிற்கல்வி பயிலும் நிலையில் இருந்தால், அவர்களின் உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டங்களின் கீழ் 2026–27ம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் சேர்ந்த மாணவ–மாணவிகளுக்கான விண்ணப்பங்களில் School Appeal Pending, Aadhaar Seeding Pending, Yet to be Applied, Yet to be Verified உள்ளிட்ட பல்வேறு நிலைகளில் நிலுவைகள் இருப்பது குறித்து கூட்டத்தில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவித்தொகை எந்த காரணத்தாலும் தாமதமாகக் கூடாது என்பதால், நிலுவையில் உள்ள பணிகளை ஒவ்வொரு கல்லூரியும் விரைந்து முடிக்க வேண்டும் என ஆட்சியர் அறிவுறுத்தினார். மாணவர்களின் விண்ணப்ப நிலையை தொடர்ந்து கண்காணித்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கல்லூரி முதல்வர்கள் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர்களிடம் கேட்டுக் கொண்டார்.

இதற்காக மாவட்ட சமூக நல அலுவலர் கோமதி முன்னிலையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள 125 கல்லூரிகளைச் சேர்ந்த முதல்வர்கள் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்றனர். மேலும், புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி, மாணவர்களுக்கு பயன்கள் சென்றடைய சிறப்பாக பணியாற்றியவர்களை பாராட்டும் வகையில், ஆட்சியர் வந்தனா கார்க் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ், மாவட்ட சமூக நல அலுவலர் கோமதி, கல்லூரி முதல்வர்கள், முதன்மை வங்கி மேலாளர், மாவட்ட மின் மேலாளர், மின் மாவட்ட அலுவலகம், நிர்வாக அலுவலர், ELCOT, கேபிள் டிவி தனி வட்டாட்சியர், மாவட்டமத்தியகூட்டுறவு வங்கி மேலாளர் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாள் பொதுக்கூட்டம்,




திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, வத்தலக்குண்டு மேற்கு, கிழக்கு மற்றும் வடக்கு ஒன்றியக் கழகங்கள் சார்பில் சிறப்பாக நடைபெற்றது.

இப்பொதுக்கூட்டத்தில், கழகப் பொருளாளர், திண்டுக்கல் கிழக்கு மாவட்டக்கழகச்செயலாளர், முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திண்டுக்கல் சி.சீனிவாசன் M.A., M.B.A., அவர்கள், அவர்கள்சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக்கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## பழனி சுற்றுவட்டார 3 கிராமங்களில் பேங்க் ஆஃப் இந்தியா சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

பழனி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள மூன்று கிராமங்களில் பேங்க் ஆஃப் இந்தியா சார்பில் சாலையோர வியாபாரிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வுநிகழ்ச்சிகள் நடைபெற்றன. பழனி கிளை மேலாளர் பிரேம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில், சாலையோர வியாபாரிகளுக்கு வங்கியின் மூலம் கிடைக்கும் பல்



வேறு கடன் திட்டங்கள், கடன் பெறுவதற்கான தகுதிகள், விண்ணப்பிக்கும் நடைமுறைகள் மற்றும் தேவையான ஆவணங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவிகள், சேமிப்பின் முக்கியத்துவம், வங்கி சேவைகளை பாதுகாப்பாக பயன்படுத்தும் முறைகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன. இதன் மூலம் சாலையோர வியாபாரிகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் வங்கிக் கடன் மற்றும் அரசின் பல்வேறு நலத்திட்டங்களை முறையாக பயன்படுத்திக் கொண்டு தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளலாம் என வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேசபக்தி



# 4,724 செவிலியர் பணியிடங்களை ஒப்பந்த முறையில் நிரப்புவதா?

## நிரந்தரப் பணியிடங்களில் செவிலியர்களை நியமிக்க வலியுறுத்தி திருவண்ணாமலையில் ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை, செப்.19–

அரசு மருத்துவமனைகளில் உள்ள 4,724 காலிப்பணியிடங்களை 11 மாத ஒப்பந்த அடிப்படையில் நிரப்பும் நடவடிக்கையை உடனடியாக கைவிட்டு,



நிரந்தர பணியிடங்களில் செவிலியர்களை நியமிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில் திருவண்ணாமலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலகம் முன்பு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், அரசு மருத்துவமனைகளில் நீண்டகாலமாக நிலவி வரும் செவிலியர் காலிப்பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்ப வேண்டும் என வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள 4,724 பணியிடங்களை 11 மாதகால ஒப்பந்த அடிப்படையில் நிரப்பும் முடிவை அரசு உடனடியாக கைவிட வேண்டும். செவிலியர்களின் பணிப் பாதுகாப்பையும், நோயாளிகளின் மருத்துவ சேவையின் தரத்தையும் கருத்தில் கொண்டு, நிரந்தர தன்மை கொண்ட பணியிடங்களில் செவிலியர்களை பணியமர்த்த வேண்டும் என போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மேலும், மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் (MRB) மூலம் முறையான தேர்வு நடத்தி, தகுதியான செவிலியர்களை நிரந்தர பணியிடங்களில் நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் கே.விஜயா, மாவட்ட செயலாளர் நந்தினி, மாவட்ட பொருளாளர் தாணி உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் மற்றும் செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் பரிதிமால் கலைஞன், ஜெ. ராஜா ஆகியோர் கலந்து கொண்டு போராட்டத்திற்கு வாழ்த்துரை வழங்கினர்.



இயக்க மறுசீரமைப்பு இயக்கத் திட்டம் SSA 2 கலந்தாய்வுக் கூட்டத்தில், திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளர் RVJ.சுரேஷ் அவர்களும்.... திண்டுக்கல் மேற்கு மாவட்ட தலைவர் சி. சாமிநாதன் ஆகியோர்கள் தலைமையில் பழனியில் நடைபெற்றபோது ஏராளமான தொண்டர்களும் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்

# இராணிபேட்டை மாவட்ட ஆட்சியர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் தலைமையில் மாபெரும் வங்கி தொழிற்கடன் முகாம்

இராணிபேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் மாபெரும் வங்கி தொழிற்கடன் முகாம் நடைபெற்றது.



இராணிபேட் மாவட்ட ஆட்சியர் திருமதி. ந. ப்ரியா ரவிச்சந்திரன் இ. ஆய். அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (18.09.2026) மாபெரும் வங்கி தொழிற்கடன் முகாம் நடைபெற்றது. தொடர்ந்து, மாவட்ட தொழில்மையம் சார்பில் நடைபெற்ற மாபெரும் வங்கி தொழிற்கடன் முகாமில் 68 பயனாளிகளுக்கு ரூ. 1.30 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் ஒப்பளிப்பு வழங்கினார்கள். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

வங்கிகள் தொழில் தொடங்க வங்கி கடன் பெறும் மக்களுக்கு உள்ள சிரமங்களை களையும்படியும். விரைவாக வங்கிக்கடன் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு ராஜன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.ஜெகன்ராஜ், வங்கி மேலாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சாத்தனூர் அணையில் முதலை கடித்து இளைஞர் பலி: பெற்றோருக்கு ரூ.10 லட்சம் நிவாரணம்

## உயிரிழந்த முனீஸ்வரனின் குடும்பத்துக்கு ஆட்சியர் வந்தனா கார்க் நிவாரணத் தொகை வழங்கினார்

சாத்தனூர் அணை நீர்பிடிப்பு பகுதியில் முதலை கடித்து உயிரிழந்த 18



வயது இளைஞரின் பெற்றோருக்கு ரூ.10 லட்சம் நிவாரணத் தொகைக்கான காசோலையை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் வழங்கினார்.

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த கண்ணன் மகன் முனீஸ்வரன் (18). இவர் கடந்த 14.09.2025 அன்று சாத்தனூர் வனச்சரகத்திற்குட்பட்ட பெண்ணையாறு காப்புக்காடு பகுதியில் உள்ள சாத்தனூர் அணை நீர்பிடிப்பு பகுதிக்கு குளிக்கச் சென்றுள்ளார். அப்போது நீரில் இருந்த முதலை முனீஸ்வரனை கடித்ததில் அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இதையடுத்து வனத்துறை சார்பில் வனவிலங்கு தாக்குதலில் உயிரிழப்பவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி, வனவிலங்கு தாக்குதலில் உயிரிழந்த முனீஸ்வரனின் குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான காசோலையை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (18.09.2026) நடைபெற்ற நிகழ்ச்சியில், உயிரிழந்த முனீஸ்வரனின் தந்தை கண்ணனிடம் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் வழங்கினார்.

இந்தநிகழ்வில் மாவட்ட வன அலுவலர் கு.சுதாகர், சாத்தனூர் வனச்சரக அலுவலர் மு.தமிழரசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.





தமிழ்நாடு உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்கம் சார்பில்

# மாவட்ட தலைநகரங்களில் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, அரசின் கவன ஈர்ப்பு பெருந்திரள் போராட்டம்

இராணிப்பேட்டை மாவட்டத்தில் இராணிப்பேட்டை முத்துக்கடை பேருந்துநிலையம்அருகே 18.09.2026, வெள்ளிக்கிழமை மாலை தமிழ்நாடு உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்கம் சார்பில் மாவட்ட தலைநகரங்களில் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அரசின் கவன ஈர்ப்பு பெருந்திரள் போராட்டம் இதில் மாவட்ட தலைவர் முரளி, மாவட்ட செயளாலர் செல்வகுமார், பொருளாளர் மோகன், மாவட்ட பொறுப்பாளர்கள் மேகவர்னன், கலை அரசன், வையாபுரி, ஆறுமுகம் மற்றும் ஒன்றிய பொறுப்பாளர்கள், சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் கீழ் கண்ட கோரிக்கைகளை முன்வைத்து முழக்கங்களை எழுப்பினர்.

1. AAO/AHO பணியினை தொழில்நுட்ப பணியாக அங்கீகரித்து, அதற்குரிய ₹9300+4200 க்கு இணையான ஊதியம் வழங்குக.

2. UATT 2.0 வை முழுமையாக செயல்படுத்தி, தலைமை இடங்களில் விவசாயிகளுக்கு சேவை புரிய ஒருங்கிணைந்த கிராம வேளாண்மை விரிவாக்க சேவை மையம் ஏற்படுத்தி தருக.

3.DCS பணியில் நீதிமன்ற ஆணை மற்றும் அரசாணை எண் 15ஐ முழுமையாக செயல்படுத்துக. DCS பணியில் பெண் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடுக.

4. துறையின் அனைத்து பணிகளும் இணைய பதிவேற்ற மூலம் நடைபெறுவதால் இணைய வசதியுடன் கூடிய கையடக்க கணினி வழங்கிடுக.

5. FR மற்றும் UFR Bucketing பதிவேற்றம் செய்யும் பணியில், போதுமான தரவுகள் இல்லாததால் AAO/AHO களுக்கு இப்பணியில் விலக்கு அளித்திடுக.

6. AHO பணிவரன் முறை விதிகளை AAO களுக்கு உள்ளது போன்று திருத்தி வழங்குக.

7. விவசாயிகளுக்கு உயிர்உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை 100% மானியத்தில் வழங்குக.

8. மக்காச்சோளம் உள்ளிட்ட விதை விநியோகத் திட்டங்களில் விவசாயிகள் விரும்பாத ரகங்களை திணிக்காமல் விரும்பும் ரகங்களை வாங்கி பயன்படுத்திக் கொள்ள பின்னேற்பு மானியம் வழங்கிடுக.

9. AAO/AHO களுக்கு நிரந்தர பயணப்படியை ₹3000 ஆக உயர்த்தி, வேளாண் வணிகத்துறை AAO களுக்கும் வழங்கிடுக.

10. ASO களுக்கு கிடங்கு மேலாளர்கூடுதல்பொறுப் பேற்க நிர்பந்திக்கும் ஆணையை ரத்து செய்க.



சிறுமி பாலியல் வன்கொடுமை (POCSO) வழக்கில் இரண்டு குற்றவாளிகளுக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டணை மற்றும் தலா ரூ.30,000 அபராதம் மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூபாய் 5 இலட்சம் இழப்பீடு வழங்க உத்தரவு

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், கடந்த 10.02.2017 அன்று சிறுமி பாலியல் வன்கொடுமை (POCSO) பதிவு செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான 1. காதர்பாஷா (வ/63) 2.ஆனப்பன் (வ/73) ஆகியோர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில், இன்று (18.09.2026) இராணிப்பேட்டை மாவட்ட முதன்மை அமர்வு மாண்புமிகு நீதிபதி அவர்கள், இவ்வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டதன் அடிப்படையில், குற்றவாளிகளான A1.காதர்பாஷா (வ/63) A2.ஆனப்பன் (வ/73) ஆகிய இருவருக்கும் தலா 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் தலா ரூ.30,000 அபராதம் மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூபாய் 5 இலட்சம் இழப்பீடு வழங்க உத்தரவு விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இவ்வழக்கில் நீதிமன்றத்தில் சிறப்பாக வழக்கை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்த முன்னாள் அரசு வழக்கறிஞர் திரு. சங்கர், தற்போதைய அரசு வழக்கறிஞர் திரு.V.P.டில்லி வழக்கின் அப்போதைய புலனாய்வு அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி. சுப்புலட்சுமி, தற்போதைய புலனாய்வு அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு.சக்தி கணேஷ் மற்றும் நீதிமன்ற சிறப்பு உதவி ஆய்வாளர்(WSSI199)திருமதி.பிரபாஆகியோரை, இராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பே.சிபின், இ.கா.ப., அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.

# விநாயகர் சிலை கரைப்பிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து காவல் ஆணையாளர் நேரில் ஆய்வு

செங்குன்றம், செப்டம்பர் 19:

ஆவடி காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட பழவேற்காடு பகுதியில் விநாயகர்சிலைகள்20.09.2026 அன்று ஞாயிற்றுக்கிழமை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கடலில் கரைக்கப்பட உள்ளன. இதனையடுத்து, பழவேற்காட்டில் விநாயகர் சிலைகள் கரைக்கப்படும் இடத்திற்கு ஆவடி மாநகர காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் நேரில் சென்று, பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளை ஆய்வு செய்தார். மேலும், பொதுமக்களின் பாதுகாப்பையும், சுமூகமான சிலை கரைப்பு நிகழ்வையும்உறுதிசெய்ய மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து காவல் அதிகாரிகளுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கினார்.





செங்குன்றம் காவல் மாவட்ட துணை ஆணையர் மகேஸ்வரி உள்ளிட்ட காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் உடனிருந்தனர். தொடர்ந்து, பொன்னேரி காவல் சரகத்திற்கு உட்பட்ட E1 பொன்னேரி, E2 திருப்பாலைவனம் மற்றும் E4 காட்டூர் ஆகிய காவல் நிலையங்களுக்கு நேரில் சென்று, நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பாகவும் மற்றும் காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் குறித்தும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

# மோடி பிறந்தநாள்: பெத்த மங்கலத்தில் நோயாளிகளுக்கு பழங்கள், இனிப்புகள் வழங்கிய பாஜகவினர்

கே.ஜி.எஃப்:செப்.19

பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு, கே.ஜி.எஃப் கிராமப்புற பகுதி பாஜக சார்பில் பெத்த மங்கலத்தில் உள்ள சமூக சுகாதார மையத்தில் சேவை நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களுக்கு பழங்கள், இனிப்புகள் மற்றும் மிட்டாய்கள் வழங்கப்பட்டன. பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு, பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையில் பல்வேறு சேவை நிகழ்ச்சிகளைநடத்தகட்சி சார்பில் திட்டமிடப்பட்டுள்ளதாக பாஜக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

அதன் ஒரு பகுதியாக, மரக்கன்றுகள் நடுதல், ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றுதல் உள்ளிட்ட சமூக நலப் பணிகள் வரும் நாட்களில் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர்கள் கூறினர்.



நிகழ்ச்சியின்போது செய்தியாளர்களிடம் பேசிய பாஜக நிர்வாகிகள், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் இந்தியா பல்வேறு துறைகளில் வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருவதாக தெரிவித்தனர்.

மேலும், பிரதமர் மோடிக்கு நல்ல ஆரோக்கியம், நீண்ட ஆயுள் கிடைக்க வேண்டும் என்றும், இந்தியா தொடர்ந்து வளர்ச்சி பெற வேண்டும் என்றும் அவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்த சேவை நிகழ்ச்சியில் பாஜக ஊரகத் தலைவர் லட்சுமி நாராயண் சர்மா, முன்னாள் கிராம பஞ்சாயத்து தலைவர்கள் வெங்கடாசலபதி, சுனில், மோர்ச்சா துணைத் தலைவர் விஜய் பாஸ்கர் நாயுடு, யுவ மோர்ச்சா தலைவர் மஞ்சு (பாண்டு), முன்னாள் கிராம பஞ்சாயத்து உறுப்பினர்கள் நாராயணசாமி, ஓம் சுரேஷ் மற்றும் பாஜக நிர்வாகிகள் வெங்கடேஷ், கங்காதர், கேசவா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், நோயாளிகள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களுக்கு பழங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டதுடன், தொடர்ந்து பல்வேறு சேவை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக பாஜக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# சென்னை விமான நிலையத்தில் நண்பரை வழியனுப்பிவிட்டு திரும்பியபோது சோகம்

## லாரி மீது கார் பயங்கர மோதல் - 2 வாலிபர்கள் பலி

சேத்துப்பட்டு, செப்.19:

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு அருகே லாரியும் காரும் நேருக்கு நேர் மோதிய பயங்கர விபத்தில் 2 வாலிபர்கள் உயிரிழந்தனர். மேலும் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கலசப்பாக்கம் தாலுகா கந்தம்பாளையம் கிராமத்தை சேர்ந்தவர் சுந்தரம் (33). இவர்காரப்பட்டில் உள்ள ஷூ நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். கடலாடி கிராமத்தை சேர்ந்த தங்கராஜ் (34), திருப்பூரில் உள்ள துணிக்கடையில் வேலை செய்து வந்தார். அதே கிராமத்தை சேர்ந்த செல்வராஜ் (36), காரப்பட்டில் உள்ள ஷூ நிறுவனத்தில் வேலை செய்து வந்தார்.

இவர்கள் 3 பேரும் தங்களது நண்பர் சத்தியமூர்த்தியை வெளிநாடு செல்வதற்காக சென்னைக்கு காரில் அழைத்துச் சென்று விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்துவிட்டு, பின்னர் மீண்டும் சொந்த ஊருக்கு புறப்பட்டனர். காரை சுந்தரம் ஓட்டிச் சென்றார். வந்தவாசி–சேத்துப்பட்டு நெடுஞ்சாலையில் ஜெகநாதபுரம் கிராமம் அருகே அதிகாலை சென்றபோது, எதிரே சேலம் மாவட்டம் மாத்தூர் பெரிய கிருஷ்ணாபுரம் கிராமத்தை சேர்ந்த அன்பு (41) ஓட்டி வந்த லாரி மீது கார் எதிர்பாராதவிதமாக பயங்கரமாக மோதியது.

மோதலின் வேகத்தில் கார் அப்பளம் போல் நொறுங்கியது.

இதில் காரை ஓட்டிச் சென்ற சுந்தரம் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். காரில் இருந்த தங்கராஜ் மற்றும் செல்வராஜ் ஆகியோர் படுகாயமடைந்து காருக்குள் சிக்கினர்.

விபத்து குறித்து தகவல் அறிந்த சேத்துப்பட்டு போலீசார் மற்றும் தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். நொறுங்கிய காருக்குள் சிக்கியிருந்த வர்களை கடப்பாரை மற்றும் ஜேசிபி இயந்திரத்தின் உதவியுடன் மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

படுகாயமடைந்த தங்கராஜ் மற்றும் செல்வராஜ் ஆகியோர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சேத்துப்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஆனால், மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே தங்கராஜ் உயிரிழந்தார்.





இதையடுத்து படுகாயமடைந்த செல்வராஜ் மேல் சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். விபத்தில் உயிரிழந்த சுந்தரம் மற்றும் தங்கராஜ் ஆகியோரின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக போளூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த விபத்து குறித்து சுந்தரத்தின் சகோதரர் எழில்மாறன் அளித்த புகாரின் பேரில் சேத்துப்பட்டு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். லாரி–கார் மோதலுக்கான காரணம் குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக ஆலோசனைக் கூட்டம்

செங்குன்றம், செப்டம்பர் 19:



சென்னை வடகிழக்கு மாவட்ட திமுகவிற்கு ட்பட்ட பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் நடைபெற்றது.

சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் மதுராந்தகம் தொகுதியில் நடைபெற உள்ள இடைத் தேர்தலில் ஆற்ற வேண்டிய ஆக்கப்பணிகள் குறித்து உரையாற்றினார்.

இந்நிகழ்வில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மாவட்ட நிர்வாகிகள் ராசேந்திரன், மிசா மதிவாணன், ராமகிருஷ்ணன், பகுதி செயலாளர்கள் துக்காராம், புழல் எம்.நாராயணன், ஏ.வி. ஆறுமுகம், தனியரசு, வை.ம. அருள்தாசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், ஒன்றியச் செயலாளர்கள் சோழவரம் தெற்கு மீ.வே. கர்ணாகரன், புழல் ச.அற்புதராஜ், வில்லிவாக்கம் கோ.தயாளன், செங்குன்றம் பேரூர் கழக பொறுப்பாளர் ஆர்.டி. சுதாகர் உள்ளிட்ட மாவட்ட, பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், இளைஞரணி நிர்வாகிகள் உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# "அனைத்திந்திய இந்து திருக்கோயில்கள் பாதுகாப்பு சங்கம் சார்பாக மதுரையில் மாபெரும் அன்னதான விழா!

மதுரையில் மிக விமர்சியாக நடைபெற்ற அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழாவில் பல லட்சக்கணக்கான பக்தர்கள்



கலந்து கொண்டனர். அனைத்திந்திய இந்து திருக்கோயில்கள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பாக கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.இந்த அன்னதான விழாவில் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் வரிசையில்நின்று அன்னம்பெற்று சென்றனர்.சிறப்பு அழைப்பாளர்களாக வாசி யோக சித்தர் ராம் நாரயணன் குரு மற்றும் ஸ்ரீ வித்யாம்பா ஸரஸ்வதி, சங்கத்தின் மாநில கௌரவ தலைவர் பிரபு ஜி ஆகியோர் கலந்து கொண்டு அன்னதானத்தை தொடங்கி வைத்தனர். அன்னம் பெற்று சென்ற பக்தர்கள் அனைவரும் சங்கத்தினரிடம் மிக அருமையான அன்னம் வழங்கி உள்ளீர்கள் நீங்கள் சிறப்பாக இந்த சேவையினை தொடர்ந்து செய்ய வேண்டும்.மேலும் சங்கத்தில் உள்ள அனைவரும் நல்லா இருக்க வேண்டும் என்று பக்தர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்து சென்றனர். இந்த மாபெரும் அன்னதான விழாவை சங்கத்தின் நிறுவனர் மற்றும் தேசிய தலைவர் அருள்வேலன் ஜி அவர்களின் ஆலோசனைப்படி மதுரை மாவட்டத்தின் மாநில பொறுப்பாளர்கள் சித்த மருத்துவர் முருகேசன், தொழிலதிபர் சிவா, முருகன், கணேஷ், சித்த மருத்துவர் பாண்டிதுரை, ஜூசி பாண்டியன்,கோவை செந்தில்குமார்,சேலம்ரமேஷ்மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் சிறப்பாக இந்த விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# தொடக்க கல்வித்துறையில் தமிழக அரசின் டாக்டர் ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்கள்

இராணிப்பேட்டை மாவட்டத்தில் தொடக்கக் கல்வித்துறையில் தமிழக அரசின் டாக்டர். இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களான பாலமுருகன், அன்பரசி, தேன்மொழி, ஞானசேகரன் ஆகியோர் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று மாவட்ட ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன், அவர்களிடம் வாழ்த்து பெற்றனர். உடன்மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மோகனா உள்ளார்.







கன்னியாகுமரி.பாரதப் பிரதமர் நரேந்திர மோடிஜி அவர்களுடைய 76 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் விதமாக குருந்தன்கோடு மேற்கு மண்டல் சார்பாக பிரதமர்பெயரில்சிறப்பு பிரார்த்தனை மற்றும் தீபம் ஏற்றும் நிகழ்ச்சி மண்டைக்காடு பகவதி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக மாலை 6:00 மணிக்கு நடைபெற்றது. குருந்தன்கோடு மேற்கு மண்டல் பொதுச் செயலாளர் சஜின் அவர்கள் தலைமை தாங்கினார். மற்றொரு பொதுச் செயலாளர் ஜெயசேகரன் வரவேற்று பேசினார். மாவட்டத்துணைத்தலைவரும்குருந்தன்கோடுமேற்குஒன்றியபார்வையாளருமான மணி மற்றும் தணிகை குமார் சிறப்பு விருந்தினராககலந்துகொண்டார். மாவட்ட மக்களிர் அணி தலைவர் ராணிஜெயந்தி, மாவட்ட உள்ளாட்சி மேன்பாட்டு பிரிவு தலைவர் முத்துகுமரன், தேசிய மொழிகள் பிரிவு மாவட்ட தலைவர் சிவகுமார் உள்பட கட்சி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டு நிகழ்சியை சிறப்பித்தனர்.



## பாணாவரம் பகுதியில்

# உணவு பாதுகாப்பு பயிற்சி ; சான்றிதழ் வழங்கும் முகாம்

ராணிப்பேட்டை மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை சார்பில், நியமன அலுவலர் பிரபாகரன் அறிவுறுத்தலின் பேரில், பாணாவரம் பகுதியில் உணவு வணிகர்களுக்கான உணவு பாதுகாப்பு உரிமம் மற்றும் பதிவு சான்று பெறுவதற்கான சிறப்பு முகாம் மற்றும் உணவு பாதுகாப்பு பயிற்சி சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் காவேரிப்பாக்கம் மற்றும் நெமிலி ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தினி மற்றும் பயிற்றுநர் விஷாலி ஆகியோர் கலந்து கொண்டு உணவு வணிகர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் பயிற்சிகளை வழங்கினர்.

இம்முகாமில் உணவு வணிகர்களுக்கு உரிமம் மற்றும் பதிவு சான்று பெறுவதற்கான நடைமுறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. இதில் தேவையான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு, தகுதியான உணவு வணிகர்களுக்கு உரிமங்கள் முகாமிலேயே வழங்கப்பட்டன.

மேலும் உணவு தயாரித்தல், கையாளுதல், சேமித்தல், பரிமாறுதல், பணியாளர்களின் தனிநபர் சுகாதாரம் உள்ளிட்ட உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதார நடைமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. அப்போது உணவுப் பொருட்களை முறையாகப் பகிர்ந்து பரிமாறும் முறைகள், உணவில் அனுமதிக்கப்படாத செயற்கை நிறமிகளை பயன்படுத்துவதைத் தவிர்த்தல், உணவு தயாரிப்பில் பாதுகாப்பான மற்றும் அனுமதிக்கப்பட்ட நிறமிகளை மட்டுமே விதிமுறைகளின்படி பயன்படுத்துதல் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. பின்னர் ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப் பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை உணவு பரிமாறுதல் மற்றும் பொதியிடுவதில் தவிர்த்து, பாதுகாப்பான மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும் என வணிகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதில் உணவு வணிகர்கள் அனைவரும் உரிமம், பதிவு பெற்று, உணவு பாதுகாப்பு விதிமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

# கணக்கன்பட்டியில் விநாயகர் சதுர்த்தி ஃப்ளெக்ஸ் கிழிப்பு

## மர்ம நபர்கள் குறித்து போலீசார் விசாரணை



திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கணக்கன்பட்டியில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, கணக்கன்பட்டி தவெக நிர்வாகிகள் சார்பில் கணக்கன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே ஃப்ளெக்ஸ் பேனர் வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இன்று மாலை அந்த ஃப்ளெக்ஸ் பேனரை மர்ம நபர்கள் கிழித்ததாக கூறப்படுகிறது. இது குறித்து தகவல் அறிந்த போலீசார் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஃப்ளெக்ஸ் பேனரை கிழித்தவர்கள் யார் என்பது குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருவள்ளூர் மாவட்டம், 2026ம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது; மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தகவல்

திருவள்ளூர், செப்டம்பர் 19:

சமூக நீதிக்காக பாடுபடுபவர்களை சிறப்பு செய்வதற்காக "சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது " 1995 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட வருகிறது.

சமூகநீதிக்கானதந்தைபெரியார்விருதுபெறுவோர்க்கு ரூ.5,00,000/(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) விருது தொகையும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகிறது. இவ்விருதாளர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படுகிறார்.

2026ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் "சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது" வழங்குவதற்கு உரிய விருதாளரை தேர்ந்தெடுக்க பரிந்துரைகள் வரவேற்கப்படுகிறது. எனவே, சமூக நீதிக்காக பாடுபட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அதன் பொருட்டு எய்திய சாதனைகள் ஆகிய தகுதிகள் உடையவர்கள் தங்களது விண்ணப்பத்தினை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கலாம். தங்களது விண்ணப்பம், சுயவிவரம், முழு முகவரி, தொலைபேசி எண் மற்றும் சமூக நீதிக்காக பாடுபட்ட பணிகள் குறித்த விவரம் மற்றும் ஆவணங்கள் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் 2026ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதிற்கான விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20.10.2026 என்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.

# குதிரை வளர்ப்போருக்கு புதிய கட்டுப்பாடு, பதிவு செய்யாவிட்டால் சிக்கல்; தமிழ்நாடு விலங்குகள் நலவாரிய இணையதளத்தில் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்

## ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

திருவண்ணாமலை, செப்.19

திருவண்ணாமலை மாவட்டத்தில் பயணிகள் மற்றும் பொருட்களை ஏற்றிச் செல்லுதல், குதிரை சவாரி, சவாரி பயிற்சி, பந்தயம், திருமண நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு பயன்பாடுகளுக்காக குதிரைகளை வளர்த்து வரும் உரிமையாளர்கள், தங்களது குதிரைகள் மற்றும் குதிரையினங்களை தமிழ்நாடு விலங்குகள் நலவாரிய இணையதளத்தில் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

மாவட்டத்தில் பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் குதிரைகள் மற்றும் பிற குதிரையினங்கள் அனைத்தும் தமிழ்நாடு விலங்குகள் நலவாரிய இணையதளத்தில் www.tnawb.tn.gov.in பதிவு செய்யப்பட வேண்டும். குதிரைகளை வளர்க்கும் உரிமையாளர்கள் அவற்றின் நலன், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான பராமரிப்பு தொடர்பான விதிமுறைகளை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். குதிரைகளை வைத்திருப்பதற்காக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடம் இருந்து உரிய உரிமம் பெற்றிருக்க வேண்டும். மேலும், கால்நடைகளை பராமரிப்பதில் அலட்சியம் காட்டியது அல்லது கொடுமைப்படுத்தியது தொடர்பாக உரிமையாளர் மீது எந்தவொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கக் கூடாது. குதிரைகளின்



ஆரோக்கியம், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் அவை தங்கும் சூழல் ஆகியவை முறையாக உள்ளதா என்பதை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு விலங்குகள் நலவாரிய அலுவலர்கள் குதிரை லாயங்கள் மற்றும் குதிரைகளை முழுமையாக ஆய்வு செய்ய உரிமையாளர்கள் அனுமதிக்க வேண்டும். இதுதவிர, குதிரை உரிமையாளரின் அடையாள ஆவணங்கள் மற்றும் குதிரைகளின் உரிமை தொடர்பான விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். குதிரைகளுக்கு அடிப்படை வசதிகள் கட்டாயம் குதிரைகள் மற்றும் பிற குதிரையினங்கள் தங்க வைக்கப்படும் இடங்களில் போதிய காற்றோட்டம், சுகாதாரம், பாதுகாப்பு, கழிவுநீர் மற்றும் கழிவு மேலாண்மை வசதிகள் இருக்க வேண்டும். மேலும், வெயில் மற்றும் மழையிலிருந்து குதிரைகளை பாதுகாக்கும் வகையில் உரிய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். குதிரைகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் வழங்குவதுடன், அவற்றின் உடல்நலம் மற்றும் நலனை பாதுகாக்க தேவையான அடிப்படை வசதிகளையும் உரிமையாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

குதிரை உரிமையாளர்கள் பதிவு மற்றும் விதிமுறைகள் தொடர்பான கூடுதல் விவரங்களை அறிந்து கொள்ள அருகிலுள்ள கால்நடை மருந்தகங்களை அணுகி, அங்கு பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர்களிடம் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

# வயலில் களமிறங்கிய ட்ரோன்! நானோ யூரியா தெளிப்பில் நவீன தொழில்நுட்பம்; விவசாயிகளுக்கு VIT வேளாண் அறிவியல் கல்லூரி செயல்விளக்கம்

வந்தவாசி :செப்.19

விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில் சீரான முறையில் பயிர்களுக்கு உரங்களைத் தெளிக்கும் நடைமுறையை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் வகையில், UAV எனப்படும் ட்ரோன் தொழில்நுட்பம் மூலம் நானோ யூரியா தெளிப்பது குறித்த பயிற்சி மற்றும் நேரடி செயல்விளக்கம் வந்தவாசி வட்டம் மாம்பட்டு–கீழ்சாத்தமங்கலம் பகுதியில் நடைபெற்றது.

வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் (VIT) வேளாண் அறிவியல் கல்லூரி சார்பில், RAWE (Rural Agricultural Work Experience – கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டம்) கீழ் இந்தப் பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

நானோ யூரியாவை பாரம்பரிய முறைகளுக்கு மாற்றாக UAV தொழில்நுட்பத்தின் மூலம் பயிர்களுக்கு திறம்படவும் சீரான முறையிலும் தெளிப்பது குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கப்பட்ட து. ட்ரோன் மூலம் நானோ யூரியா தெளிக்கும் நடைமுறை, தெளிப்பின் போது கடைப்பிடிக்க வேண்டிய முறைகள், பயிரின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப பயன்பாடு மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இதன் முக்கிய பகுதியாக, விவசாயிகள் முன்னிலையில் வயலில் UAV ட்ரோன் மூலம் நானோ யூரியா தெளிக்கும் நேரடி செயல்விளக்கம் நடத்தப்பட்டது. இதன் மூலம் ட்ரோன் தொழில்நுட்பத்தை வயல்வெளியில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதை விவசாயிகள் நேரடியாகக் கண்டறிந்தனர். மேலும், ட்ரோன் தொழில்நுட்பத்தின் மூலம் குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில் சீரான தெளிப்பை மேற்கொள்ள முடியும் என்றும்,

இதனால் தொழிலாளர் தேவை யை குறைத்து, நவீன துல்லிய வேளாண் முறைகளை நடைமுறைப் படுத்த முடியும் என்றும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயிற்சி நிகழ்ச்சி முனைவர் திருமலை க்குமார் ஆர்., உதவிப் பேராசிரியர் (உழவியல்), முனைவர் சரவணன் எஸ்., பேராசிரியர் (வேளாண் பொறியியல்), மற்றும் முனைவர் உத்பல் தாஸ், பேராசிரியர் (தோட்டக்கலை) ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்றது.

வேளாண்மைத் துறை சார்பில் வேளாண்மை அலுவலர் சதீஷ்வரன் வி., உதவி வேளாண்மை அலுவலர் பெருமாள் டி., வட்டார தொழில்நுட்ப மேலாளர் சிந்தாமணி ஆகியோர் பங்கேற்று விவசாயி களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் தேவையான வழிகாட்டுதல்களையும் வழங்கினர்.



நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை VIT வேளாண் அறிவியல் கல்லூரியின் RAWE மாணவர்கள் தேஜா ஶ்ரீ சு.ப., லயா ஶ்ரீசு., நிவேதா ஐ. மற்றும் ஹரிதாரணி மு. ஆகியோர் மேற்கொண்டனர். RAWE திட்டத்தின் வாயிலாக மாணவர்கள் கிராமப்புற விவசாயி களுடன் நேரடியாக இணைந்து, அவர்களின் நடைமுறைத் தேவைகள் மற்றும் வயல் வெளி சார்ந்த சவால்களை அறிந்து கொண்டனர். மேலும், பல்கலைக்கழகத்தில் கற்ற அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவை நேரடியாக விவசாய நிலங்களுக்கு கொண்டு செல்வதற்கான கள அனுபவத்தையும் பெற்றனர்.

விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், துல்லிய வேளாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், UAV தொழில்நுட்பத்தின்பயன்பாட்டை விரிவுபடுத்துதல் மற்றும் நவீன இடுபொருள் மேலாண்மை முறைகளை விவசாயிகளிடம் கொண்டு சேர்த்தல் ஆகிய நோக்கங்களுடன் நடைபெற்ற இந்தப் பயிற்சி நிகழ்ச்சி, விவசாயிகளுக்கு பயனுள்ள களப்பயிற்சியாக அமைந்தது.

## கொடைக்கானல் நகராட்சி அதிகாரிகளுக்கு அன்பான வேண்டுகோள்.

மக்கள் குடிக்கும் குடிநீரில் விளையாடாதீர்கள்.

தற்பொழுது ஆனந்தகிரி நான்காவது தெரு பகுதியில், நகராட்சியால் விநியோகம் செய்யப்படும் குடிநீரானது, தற்போது இந்த கலரில் உள்ளது. சுத்திகரிக்கப்படுகின்றதா? அல்லது வேறு எங்கிருந்து திறந்துவிடப்படுகின்றது. ஆய்வு செய்யுங்கள் நடவடிக்கை எடுங்களென அப்பகுதி மக்கள் கோரிக்கை



### தனிநபரின் பிடியில் செங்குளம் கண்மாய்:

# பொதுப்பணித்துறையின் அதீத அலட்சியத்தால் நீரில் மூழ்கிய நெல் பயிர்கள்

தேனி மாவட்டம் சின்னமனூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கீழ பூலாநந்தபுரம் (கோவில்பட்டி) கிராமத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க செங்குளம் கண்மாய்க் கரை திடீரென உடைந்து, சுற்றியுள்ள பல ஏக்கர் நெல் விளைநிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி பலத்த சேதமடைந்துள்ளன. அரசு வருவாய்த் துறை (ARegister) மற்றும் பொதுப்பணித்துறை (WRD) பதிவேடுகளின்படி இக்கண்மாயின் மொத்த பரப்பளவு 70 ஏக்கர் ஆகும். இந்த 70 ஏக்கர் கண்மாயையும் முறையான திட்டமிடலோடு தூர்வாரி, ஆக்கிரமிப்புகளை அகற்றி சிறந்த முறையில் பராமரித்து வந்திருந்தால், இதில் சேமிக்கப்படும் தண்ணீரை கொண்டு அப்பகுதி விவசாயிகள் எந்தவித நீராதாரத்தையும் எதிர்நோக்காமல் தொடர்ந்து இரண்டு போக நெல் சாகுபடியை மிகவும் தாராளமாக செய்து முடிக்க முடியும். ஆனால், பொதுப்பணித்துறையின் கடுமையான அலட்சியத்தாலும், பல ஆண்டுகளாக தூர்வாரப்படாததாலும், கரை ஓர ஆக்கிரமிப்புகளாலும் இக்கண்மாயின் பயனுள்ள பரப்பு வெறும் 23 ஏக்கராக சுருங்கி போனதுடன், சிறிதளவு மழைக்கே கரை உடைந்து வயல்கள் பாழாகும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய பேரழிவுக்கு பின்னணியில் பொதுப்பணித்துறை அதிகாரிகளின் கைகூலி மற்றும் மாமூல் கலாச்சாரமும், தனிநபர்களின் சட்டவிரோத ஆதிக்கமுமே முதன்மை காரணமாக உள்ளது. தற்போது சில தனிநபர்களின் பிடியில் ஒட்டுமொத்த செங்



குள கண்மாயும் சிக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. மீன்வளத்துறை மூலம் அரசால் முறைப்படி பகிரங்க மின்ஏலம் (EAuction) விடப்பட்டு உரிமக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்ற சட்ட விதியை முற்றிலுமாக புறந்தள்ளிவிட்டு, மீன் வளர்ப்பதற்காக நீர்வரத்து மற்றும் மதகுகளை (Sluices) பராமரிக்கும் அதிகாரத்தை தனிநபர்கள் தங்கள் கையில் எடுத்துக்கொண்டுள்ளனர். அதிகாரிகளுக்கு தொடர்ச்சியாக செல்லும் முறைகேடான மாமூல் காரணமாகவே, இந்தத் தனிநபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ அல்லது கண்மாயை மீட்கவோ பொதுப்பணித்துறையினரும் மீன்வளத்துறையினரும் அஞ்சிநடுங்கி மௌனம் சாதித்து வருகின்றனர். கடந்த பல ஆண்டுகளில் இக்கண்மாயை தூர்வாருவதற்கும் கரைகளை பலப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டதா, அப்படி நிதி ஒதுக்கப்பட்டிருந்தால் தூர்வாரியதற்கான அரசு ஆவணங்கள் மற்றும் கணக்கு வழக்கு ஆதாரங்கள் எங்கே என்ற கேள்விக்கு அதிகாரிகளிடம் எந்த பதிலுமில்லை. இந்த கொடூரமான மனித தவறினாலும் சட்டமீறலாலுமே "இயற்கை சீற்றம் போன்ற போர்வையில் இந்த செயற்கை பேரழிவு" நிகழ்ந்துள்ளது. சமீபத்தில் பெய்த கனமழையின் போது, தனிநபர்கள் மீன் வளர்ப்பிற்காக மதகுகளை அடைத்து அளவுக்கு அதிகமாக தண்ணீரை தேக்கி வைத்திருந்ததால், நீர்மட்டம் கட்டுக்கடங்காமல் உயர்ந்து பலவீனமான கண்மாய்க்கரை உடைந்து வெள்ளம் பாய்ந்தது. தமிழ்நாடு நீர்நிலைகள் பாதுகாப்பு சட்டம் 2007 (பிரிவு 4, 5 & 6)ன்படி PWD அதிகாரிகள் FMB வரைபடத்தின்படி அளந்து ஆக்கிரமிப்புகளை அகற்றியிருக்க வேண்டும். மேலும், சென்னை உயர் நீதிமன்றத்தின் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்புகளின்படி (L. Krishnan Case) நீர்நிலைகளை ஆக்கிரமிப்பதோ அதன் தன்மையை மாற்றுவதோ சட்டவிரோதமாகும். அதோடு, வருவாய்த் துறை அரசாணை GO 854ன் படி நீர்நிலை புறம்போக்கை தனிநபர் பயன்பாட்டிற்கு விடக்கூடாது என்ற விதியும் இங்கு வெளிப்படையாக மீறப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள இந்த மிக கடுமையான சூழலில், மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் தலைவராகவும் (Disaster Management Act 2005 Sec 30, 34), மாவட்ட முதன்மை நடுவராகவும் (CrPC Sec 133 Public Nuisance) சட்டப்பூர்வமாக உச்சகட்ட அதிகாரம் படைத்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் உடனடியாக இதில் தலையிட வேண்டும். பொதுப்பணித்துறை மற்றும் மீன்வளத்துறையின் அலட்சியப்போக்கை கண்டிப்பதோடு, செங்குளம் கண்மாயை மாவட்ட நிர்வாகம் உடனடியாக தன் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும். PWD மூலம் போர்க்கால அடிப்படையில் கண்மாயை உடனடியாக தூர்வாரி கரைகளை பலப்படுத்தவும், மீன்வளத்துறை மூலம் வெளிப்படையான அரசு ஏலத்தை கொண்டுவரவும், தனிநபர்கள் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட வேண்டும்.

மேலும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பேரிடர்நிவாரண நிதியிலிருந்து உடனடியாக இழப்பீடு வழங்கி, பொதுச் சொத்தான கண்மாயை மீட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க மாவட்ட ஆட்சியர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


**தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779




## 8 கி.மீ. ஒளியிழை கேபிள் பதிக்கும் சீரிய முயற்சி; சேரந்தாங்கல் உள்ளிட்ட கிராமங்களுக்கு டிஜிட்டல் வசதி

திருவண்ணாமலை,செப்.19

செல்போன் நெட்வொர்க் மற்றும் அதிவேகஇணையவசதிக்காகநீண்டகாலமாக காத்திருந்த சேரந்தாங்கல் மற்றும் சுற்றுவட்டாரகிராம மக்களின் எதிர்பார்ப்புக்கு தீர்வு காணும் வகையில், T.Malai Telecom Private Limited நிர்வாக இயக்குநர் L. சந்திரசேகரனின் சீரிய முயற்சியில் 8 கி.மீ. தொலைவுக்கு ஒளியிழை (ஃபைபர் ஆப்டிக்) கேபிள் பதிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

சேரந்தாங்கல் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் போதிய செல்போன் நெட்வொர்க் மற்றும் இணைய வசதி இல்லாததால், மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் நீண்ட காலமாக சிரமங்களை சந்தித்து வந்தனர். ஆன்லைன் கல்வி, வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள், அரசு சேவைகள், வங்கி பரிவர்த்தனைகள் உள்ளிட்ட அத்தியாவசிய இணைய சேவைகளைப் பெறுவதிலும் சிக்கல்கள் இருந்து வந்தன.இந்நிலையில், "மக்களுக்காக" என்ற நோக்கத்துடன் சந்திரசேகரன் மேற்கொண்ட தொடர் முயற்சியின் பயனாக, கிராம மக்களுக்கும் அதிவேக இணைய சேவை கிடைக்கும் வகையில் 8 கி.மீ. ஒளியிழை கேபிள் பதிக்கும் பணிக்கு பூமி பூஜை நடைபெற்றது.

இதற்கான பணிகளை திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளர் K. பாரதிதாசன் தொடங்கி வைத்தார். செப்டம்பர் 17ஆம் தேதி அன்று காலை நடைபெற்ற பூமி பூஜையைத் தொடர்ந்து ஒளியிழை கேபிள் பதிக்கும் பணிகள் தொடங்கின.

சந்திரசேகரனின் சீரிய முயற்சி

கிராமப்புற மக்களுக்கும் நகர்ப்புறங்களுக்கு இணையான இணைய வசதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், L. சந்திரசேகரன் மேற்கொண்ட சீரிய முயற்சியே இத்திட்டம் செயல்பாட்டுக்கு வர முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

மக்களின் அன்றாட தேவைகளில் இணைய வசதி முக்கிய இடத்தைப் பெற்றுள்ள நிலையில், தொலைத்தொடர்பு வசதி குறைந்த பகுதிகளுக்கும் நவீன தொழில்நுட்பத்தை கொண்டு செல்லும் வகையில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ரூ.30 லட்சம் மதிப்பில் 8 கி.மீ. பணி

மொத்தம் 8 கி.மீ. தொலைவுக்கு ஒளியிழை கேபிள் பதிக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டு செலவு ரூ.30 லட்சம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் நன்கொடை மற்றும் நடப்பு நிதி மூலம், அரசு நிதியுதவியை எதிர்பார்க்காமல் சுய முயற்சியில் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

பணிகள் தொடங்கியதில் இருந்து 6 வாரங்களுக்குள் பணிகளை நிறைவு செய்து இணைய சேவையை பயன்பாட்டுக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. 4 கிராமங்களுக்கு இணைய இணைப்பு இந்த திட்டத்தின் மூலம் சேரந்தாங்கல் மட்டுமின்றி அகரநம்பாக்கம், சே.அகரம், பெருங்காம்பாக்கம் உள்ளிட்ட சுற்றுவட்டார கிராம மக்களும் பயனடைய உள்ளனர்.

ஒளியிழை கேபிள் இணைப்பு மூலம் மாணவர்கள் ஆன்லைன் கல்வி மற்றும் தேர்வுத் தயாரிப்புகளை மேற்கொள்ளவும், இளைஞர்கள் வேலைவாய்ப்பு மற்றும் அரசு தேர்வு தொடர்பான இணைய சேவைகளைப் பயன்படுத்தவும், பொதுமக்கள் அரசு சேவைகள் மற்றும் இணையவழி வங்கி உள்ளிட்ட பல்வேறு சேவைகளை எளிதாகப் பெறவும் வாய்ப்பு ஏற்படும். இதன் மூலம் நீண்டகாலமாக "நெட்வொர்க் வசதி இல்லாத கிராமம்" என்ற சிரமத்தை எதிர்கொண்ட பகுதிகள், விரைவில் டிஜிட்டல் இணைப்பின் புதிய பாதையில் பயணிக்க உள்ளன.

பணி தொடக்க நிகழ்ச்சியின் நிறைவில், திட்டத்தை முன்னெடுத்த L. சந்திரசேகரனின் முயற்சிக்கு அப்பகுதி பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர். K. பாரதிதாசனுக்கும் பொதுமக்கள் மற்றும் நிர்வாகிகள் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் டாக்டர் கே. இளங்கோவன், மாமன்ற உறுப்பினர்கள் டாக்டர் பழனி, கே.ஜி. சரவணன், வழக்கறிஞர் அணி கே. அன்பழகன், செங்கம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆறுமுகம், தண்டராம்பட்டு பாபு, த.வெ.க. நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




## வத்தலகுண்டில் ஆயுர்வேதிக் நிலையம் என்ற பெயரில் விபச்சாரம் பெண் உட்பட 3 பேர் மீது வழக்குப்பதிவு, 2 அழகிகள் மீட்பு

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு திருநகர் எதிரே, அரசு பேருந்து டிப்போ பின்புறம் சுதா என்பவர் நடத்தும் ஆயுர்வேதிக் நிலையத்தில் விபச்சாரம் நடைபெறுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில்நிலக்கோட்டை DSP.இளஞ்செழியன் மேற்பார்வையில் வத்தலகுண்டு காவல் நிலைய ஆய்வாளர் கௌதமன் தலைமையிலான போலீசார் திடீர் சோதனை மேற்கொண்ட போது ஆயுர்வேதிக் நிலையம் என்ற பெயரில் விபச்சாரம் நடைபெறுவது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து போலீசார் அங்கிருந்த 2 அழகிகளை மீட்டு

மேற்படிப் பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்திய சுதா, கோபி உள்ளிட்ட 3 பேர் மீது வழக்கு பதிவு செய்து போலீசார் 3 பேரையும் தேடி வருகின்றனர்

### வடமதுரை அருகே

## கொம்பேறிபட்டியில் போலி டாக்டர் கைது



திண்டுக்கல் மாவட்டம் வடமதுரையை அடுத்த கொம்பேறிபட்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் மாவட்ட நலப்பணிகள் இணைஇயக்குனர் பாரதி தலைமையிலான அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டபோது

முறையாக மருத்தும் படிக்காமல் அந்தோணிதாஸ்(68) என்பவர் நோயாளிகளுக்கு ஆங்கிலமுறை சிகிச்சை அளிப்பது தெரியவந்தது மேலும் அங்கு காலாவதியான கருக்கலைப்பு, ஆங்கில மாத்திரைகள் பறிமுதல் செய்து மருத்துவ அதிகாரிகள் வடமதுரை காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். வடமதுரை போலீசார் போலி டாக்டர் அந்தோணிதாசை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மருத்துவமனை அப்பகுதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது

### நிலக்கோட்டையில்

## சிறுமிக்கு பெண் குழந்தை பிறந்தது; வாலிபர் போக்சோவில் கைது



திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகாவை சேர்ந்த 17 வயது சிறுமி இவர் தனியார் பள்ளியில் +2 படித்து வருகிறார்

இந்நிலையில் வத்தலகுண்டு, உச்சபட்டியை சேர்ந்த முத்துப்பாண்டி மகன் தங்கப்பாண்டி(24) என்பவர் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பல முறை பாலியல் பலாத்காரம் செய்தார் இதில் சிறுமி கர்ப்பமாகி திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்தது.

இது குறித்து சிறுமியின் பெற்றோர்கள் நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்

இது தொடர்பாக நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் விசாரணை மேற்கொண்டு தங்கப்பாண்டியை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் புதன்கிழமை "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாமில் ஆற்காடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் இணை இயக்குநர் வேளாண்மை திரு.சுந்தரம், வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜி, வட்டாட்சியர் திரு.சண்முக சுந்தரம்,பரமேஸ்வரி மற்றும் பலர் உள்ளனர்.



தமிழகவெற்றிகழகத்தின்கொள்கைதலைவர்களில்ஒருவரானதந்தைபெரியார் அவர்களின்பிறந்தநாளைமுன்னிட்டுதிண்டுக்கல்தெற்குமாவட்டம்சாணார்பட்டி தெற்கு ஒன்றியம் கோபால்பட்டியில் திண்டுக்கல் தெற்கு மாவட்ட கழக செயலாளர் திரு.S.M.நிர்மல்குமார் அவர்களின் தலைமையில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது மற்றும் இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் ராஜகோபுரம் முன்பு கார்த்திகை தீப திருவிழாவிற்கான பந்தக்கால் நேற்று முன்தினம் காலை நடப்பட்டது. அருகில் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க், போளூர் சட்டமன்ற உறுப்பினர் அபிஷேக், தெற்கு, தவெக மாவட்ட செயலாளர் க.பாரதிதாசன், கோயில் இணை ஆணையர் ஜெ.பரணிதரன், சீத்தா சீனுவாசன், மாமன்ற உறுப்பினர் டாக்டர் பழனி உட்பட பலர் உடனிருந்தனர்**





பழனியருகே மானூர் பகுதியில் மின்சாரம் ரீடிங் எடுத்துஇரண்டுமதத்திற்கு மேல் ஆகிறது. போன மாதமும், கணக்கிட ஆள் இல்லை என்று அதே அமௌன்டை கட்ட சொன்னார்கள். இந்த மாதமும் அதே நிலைதான். மேலும் அனைவரும் விவசாயம் சார்ந்த தொழிலாளிகள் மிகவும் சிரமப் படுகிறார்கள்.

மின்சார துறையில் இது சம்பந்தமாக பதிவு செய்தோம். அளவீடு எடுக்க போதுமான ஆட்கள் இல்லை என்று தெரிவிக்கிறார்கள். இத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே நடவடிக்கை எடுத்து, இதை விரைவில் சரி செய்து, மக்களின் மின்சாரம் சம்பந்தப்பட்ட பொருளாதார சுமையை குறைக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA